இந்திய உயர் ஸ்தானிகராலயம்
கொழும்பு

ஊடக அறிக்கை

மாத்தளை மொரகாஹந்த பால நிர்மாண பணிகள் ஆரம்பம்

மாத்தளையில் உள்ள மொரகாஹந்த பால நிர்மாணத்துக்கான அடிக்கல், இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் கௌரவ சந்தோஷ் ஜா மற்றும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் கௌரவ பிமல் ரத்நாயக்கா ஆகியோரால் இன்று நாட்டப்பட்டது.

2. இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்கள், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் சிரேஸ்ட அதிகாரிகள் மற்றும் ஏனைய பிரமுகர்களும் கலந்துகொண்டனர்.

3. இந்திய அரசாங்கத்தின் நன்கொடை உதவியின் கீழ் இலங்கை முழுவதும் உள்ள பல்வேறு மாகாணங்களில் நிர்மாணிக்கப்படவுள்ள 13 நிரந்தர பாலங்களில் முதலாவது பாலமாக மொரகாஹந்த பாலம் காணப்படுகின்றது. டித்வா புயலை அடுத்து இந்தியா வழங்கிய புனரமைப்பு மற்றும் புனர்வாழ்வு பொதியான USD 450 மில்லியன் உதவித் திட்டத்தின் அங்கமாக இச்செயல் திட்டம் அமுல்படுத்தப்படுகின்றது. அத்துடன் பாதிக்கப்பட்ட பகுதிகளில் முக்கிய உட்கட்டமைப்பு வசதிகள் மீளமைக்கப்படுவதனை இவ்வாறான திட்டங்கள் இலக்காகக்கொண்டுள்ளன.

4. பிராந்தியத்தில் இணைப்புகளை மீளமைப்பதற்கு முக்கியத்துவம் வழங்கப்பட்ட நிலையில் இலங்கை அரசாங்கத்தினால் விடுக்கப்பட்ட விசேட கோரிக்கைக்கு அமைவாக மொரகாஹந்த பால நிர்மாண பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. இந்த புதிய பாலம் 175 மீட்டர்கள் நீளமுடைய அதேவேளை மாத்தளை மற்றும் பொலன்னறுவை ஆகிய இரு மாவட்டங்கள் இடையிலுமான போக்குவரத்தினை மீளிணைப்பதில் முக்கிய வகிபாகத்தை கொண்டுள்ளதுடன், உள்ளூர் சமூகங்களிற்கான போக்குவரத்து வசதிகளையும் எளிதாக்குகின்றது.

5. இலங்கையில் நீண்ட காலமாக தனது செயற்பாடுகளை முன்னெடுத்துவரும் இந்திய பொதுச் சேவை நிறுவனமான IRCON சர்வதேச வரையறுக்கப்பட்ட நிறுவனத்தால் இப்பாலம் நிர்மாணிக்கப்படும்.

6. மொரகாஹந்த பால நிர்மாண பணிகள் ஆரம்பமாவதை தொடர்ந்து எதிர்வரும் வாரங்களில் ஏனைய 12 நிரந்தர பாலங்களுக்கான நிர்மாண பணிகள் ஆரம்பமாகவுள்ளன

7. டித்வா புயல் காரணமாக போக்குவரத்துகள் துண்டிக்கப்பட்ட இலங்கையின் 10 இடங்களில் உடனடியான போக்குவரத்து வசதிகளை மீளமைப்பதற்காக இந்தியாவால் ஏற்கனவே 11 பெய்லி பாலங்கள் அமைக்கப்பட்டன. இந்நிலையில் நிரந்தரமான பாலம் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கின்றமையானது அவசர மீளமைப்பு நடவடிக்கைகளிலிருந்து

நிரந்தரமான நிர்மாணங்கள் மற்றும் மீள்தன்மை கொண்ட கட்டமைப்புகளை உருவாக்குதலை நோக்கிய நிலை மாற்றத்தை குறித்து நிற்கின்றது.

8. இவ்வாறான பால நிர்மாண செயற்திட்டங்களுக்கு மேலதிகமாக 250 மில்லியன் அமெரிக்க டொலர் நீண்ட கால கடனுதவி திட்டம் ஒன்று இந்திய ரூபா பணப்பரிவர்த்தனையின் கீழ் முன்னெடுக்கப்படவிருக்கும் நிலையில் அச்செயல் திட்டத்தின் கீழ் பல்வேறு ரயில் போக்குவரத்து இணைப்பு திட்டங்களும் முன்னெடுக்கப்பட உள்ளன. இத்திட்டங்களின் கீழ் பேராதனையில் புதிய ரயில் பாலத்தை அமைத்தல், ரயில்வே பாதைகளின் மீளமைப்பு மற்றும் சமிக்கை தொகுதிகளின் மீளமைப்பு ஆகியவையும் உள்ளடங்குகின்றன.

9. மீள்தன்மைகொண்ட உட்கட்டமைப்பு மற்றும் வலுவான தொடர்பாடல் வசதிகள் ஆகியவற்றை கட்டி எழுப்புவதில் இந்தியா தொடர்ந்து இலங்கைக்கு ஆதரவளித்து வருவதனை மொரகாஹந்த பால நிர்மாண பணிகளின் ஆரம்பம் பிரதிபலிக்கின்றது. இவ்வாறான முன்னெடுப்புகள், நாடு முழுவதும் உள்ள சமூகங்களுக்கு உறுதியான பலன்களை அளிப்பதை நோக்கமாகக் கொண்டு, இலங்கையுடன் இந்தியா கொண்டுள்ள நீண்டகால மற்றும் மக்களை மையப்படுத்திய அபிவிருத்தி பங்குடைமையின் ஒரு பகுதியாகும்.

****

கொழும்பு
20 செப்டெம்பர் 2026